*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*Volume 12, Issue 01 (June-2026)*
www.tamilmanam.in
*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12012026*

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor | Multidisciplinary
Article DOI: https://doi.org/10.63300/tm12012026.12

# Social Reflections in Palanibharathi's Poetry: A Comparative Approach and Deep Analysis

**D. Rajan [1*], Dr. A. Syed Zakir Hasan [2],**
[1]Ph.D. Research Scholar (Part-Time) Department of Tamil Research Jamal Mohamed College (Autonomous) (Affiliated to Bharathidasan University) Tiruchirappalli - 620020
[2]Research Advisor & Associate Professor Department of Tamil Research Jamal Mohamed College (Autonomous) (Affiliated to Bharathidasan University) Tiruchirappalli – 620020
*Corresponding Author: arthinirajan@gmail.com.

**Article Info**
Received on 27-May2026, Revised on 29-May-2026, Accepted on 29-May-2026, Published on 01-June-2026

## ABSTRACT

Poet Palanibharathi is highly notable among the prominent creators who left a distinct mark on the world of modern Tamil poetry (Puthukkavithai) during the late twentieth century and the beginning of the twenty-first century. His poems do not merely showcase aesthetic feelings of love; rather, they sharply document contemporary social miseries, political corruption, the cruelty of poverty, and the plight of the working class. This paper examines the social awareness thoughts expressed in Palanibharathi's poetry through a comparative approach alongside the social reflections of other contemporary poets such as Bharathi, Mu. Metha, Vairamuthu, Arivumathi, Ki. Kolanchi, and Mu. Valliyammai. This article provides a detailed analysis of the poet's perspective directed toward social change.

***KEYWORDS:*** *Palanibharathi, Modern Poetry (Puthukkavithai), Social Reflections, State of Poverty, Political Corruption, Plight of Laborers, Senryu Poems.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 12, Issue 01 (June-2026)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm12012026*

# பழநிபாரதியின் கவிதைகளில் சமுதாயப் பதிவுகள்: ஓர் ஒப்பீட்டு நோக்கும் ஆழமான பகுப்பாய்வும்

[1]**த. ராஜன்,** முனைவர்பட்ட ஆய்வாளர் (பகுதிநேரம்) தமிழாய்வுத் துறை, ஜமால் முகம்மது கல்லூரி (தன்னாட்சி). (பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவுப் பெற்றது) திருச்சிராப்பள்ளி -20.

[2]**முனைவர் அ. சையத் ஜாகீர் ஹசன்,** நெறியாளர், இணைப் பேராசிரியர், தமிழாய்வுத் துறை. ஜமால் முகம்மது கல்லூரி (தன்னாட்சி), (பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவுப் பெற்றது), திருச்சிராப்பள்ளி -20.

**ஆய்வுச் சுருக்கம்**

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இருபத்தியோராம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் தமிழ்ப் புதுக்கவிதை உலகில் தடம் பதித்த முதன்மையான படைப்பாளர்களுள் கவிஞர் பழநிபாரதி குறிப்பிடத்தக்கவர் ஆவார். இவருடைய கவிதைகளில் வெறும் அழகியல் சார்ந்த காதல் உணர்வுகள் மட்டுமன்றி, சமகாலச் சமுதாய அவலங்கள், அரசியல் சீர்கேடுகள், வறுமையின் கொடுமை மற்றும் தொழிலாளர்களின் அவலநிலை ஆகியவை மிகக் கூர்மையாகப் பதியப்பட்டுள்ளன. இக்கட்டுரை, பழநிபாரதியின் கவிதைகளில் வெளிப்படும் சமூக விழிப்புணர்வுச் சிந்தனைகளையும், பாரதி, மு.மேத்தா, வைரமுத்து, அறிவுமதி, கி.கொளஞ்சி மற்றும் மு.வள்ளியம்மை போன்ற பிற சமகாலக் கவிஞர்களின் சமூகப் பதிவுகளையும் ஒப்பீட்டு நோக்கில் ஆராய்கிறது. சமுதாய மாற்றத்தை நோக்கிய கவிஞனின் பார்வையை இக்கட்டுரை விரிவாகப் பகுப்பாய்வு செய்கிறது.

**முக்கியச் சொற்கள்**

பழநிபாரதி, புதுக்கவிதை, சமுதாயப் பதிவுகள், வறுமை நிலை, அரசியல் சீர்கேடு, தொழிலாளர் அவலம், சென்ரியு கவிதைகள்.

## 1. முன்னுரை

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதை இலக்கியத்தில் பொதுவாகச் சமுதாயம் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கிறது. ஒரு கவிஞனின் இலக்கியப் படைப்பில் எந்த அளவிற்குச் சமுதாய உணர்வு வெளிப்பட்டுள்ளதோ, அந்த அளவிற்கு அக்கவிஞன் சமுதாயத்தில் போற்றப்படுகிறான். சமுதாயத்தின் எண்ண நாடியைப் பிடித்தே எழுத்துக்கள் ஓடுகின்றன. மனித வாழ்க்கையைத் தத்துவம், மதம், அரசியல், இலக்கியம், பொருளாதாரம் ஆகியவை பாதிப்பிற்கு உள்ளாக்குகின்றன.

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 12, Issue 01 (June-2026)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm12012026*

ஒருவன் இவ்வுலகில் பிறந்த நாள் முதல் இறக்கும் வரையில் அவன் உலக அனுபவங்களை அனுபவித்து அறிவதற்குரிய கால எல்லையே வாழ்க்கை எனலாம்.

கற்காலம் தொடங்கி இன்றைய கணினிக்காலம் வரை மனித சமுதாயம் எண்ணற்ற மாற்றங்களைப் பெற்று வருகிறது. கற்றவர் மட்டுமே படித்து இன்புற்ற கவிதைகளைப் பாமரரும் படிக்கவும், படைக்கவும் வழிகாட்டிய பாரதியைப் பின்தொடர்ந்து தோன்றிய கவிஞர் பழநிபாரதியின் கவிதைகளில் பொதிந்துள்ள சமுதாயம் பற்றிய புதிய சிந்தனைகளை வெளிக்கொணர்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

## 2. சமுதாயமும் அதன் கோட்பாட்டு விளக்கமும்

தனிமனித வாழ்வு சமுதாயத்தோடு இணைந்ததாகும். ஒரு பரந்த நிலப்பரப்பில் தங்களுக்குத் தேவையான அனைத்தையும் ஏற்படுத்திக் கொண்டு வாழ்கின்ற மக்கள் கூட்டமே சமுதாயமாகும். வாழ்வியல் நெறியையும், பண்பாட்டையும் வளர்ப்பதில் பங்குபெரும் தனிமனிதர்களின் கூட்டமே சமுதாயமாகும். "சமம் + தாயம் = சமுதாயம்" என்றாயிற்று. சமூகம், சமுதாயம் என்ற சொற்கள் இலக்கியங்களில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. எனவே, சமூகம், சமுதாயம் என்பன ஒரே பொருளையே குறிக்கும் என்று நா. கதிரைவேல்பிள்ளை குறிப்பிடுகிறார்[1].

மக்கள் பலர் கூடிவாழும் இனக்குழுவே சமுதாயம் எனப்படும். தம்மைப் பேணிப் பாதுகாத்துக் கொள்வதற்கு "குறிப்பிட்ட நிலப்பகுதியில் நீண்ட காலமாக ஒன்று சேர்ந்து வாழும் மக்கள் கூட்டமே சமூகம் என்று வாழ்வியற் களஞ்சியம் குறிப்பிடுகின்றது"[2]. இத்தகைய சிறப்புப் பெற்ற சமுதாயம் பற்றிய விழிப்புணர்வு கருத்துப் பதிவுகளை கவிஞர் பழநிபாரதியின் கவிதைகளில் காணமுடிகிறது.

## 3. சமுதாயமும் கவிஞனும்: ஒரு கலைநெறிப் பார்வை

### 3.1 கவிஞனின் சமூகப் பொறுப்புணர்வு

கவிஞர்கள் சமுதாயத்தின் மீது அக்கறை கொண்டு அதன் நிகழ்வுகளைக் கவிதைகளாகப் படைக்கிறார்கள். உலகப் பிரச்சினைகளுக்கு மதங்கள் தான் முதன்மைக் காரணமாக இருக்கின்றன. இந்த மதத்தைக் காப்பாற்றும் பணியில் தன்னை முழுமையாய் ஈடுபடுத்திக் கொண்டு, தனக்கான மகிழ்ச்சியைத் தொலைத்துவிடும் மனிதனின் செயல்பாடுகளைக் கவிஞர் பழநிபாரதியின் கவிதைகளில் காணமுடிகிறது.

“எனது உலகத்திலிருந்து எதுவுமில்லை உனக்கு மதங்களற்ற உனது பொம்மைகளின் உலகத்திலிருந்து முடிந்தால் கொடு எனக்கொரு சிரிப்பை”[3]

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 12, Issue 01 (June-2026)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm12012026*

என்று குழந்தையிடம் அவர் கேட்கும்போது சிரிப்பை இழந்து நிற்கும் சமூகத்தின் அவலநிலை சித்திரமாக்கப்பட்டு இருப்பதையும், தம் உள்ளத்தில் எழும் தேசிய உணர்வுகளை உருவகப்படுத்தி உணர்ச்சி ததும்பக் கூறியிருப்பதையும் உணரமுடிகிறது.

**3.2 போலி மதக்கோட்பாடுகளும் மனிதநேயமும்**

பழநிபாரதி தனது இருபதாம் வயதிலேயே, "சூரியனையும் அடுப்பையும் தவிர எந்தத் தீயும் வெப்பமும் என் தேசத்தை வருத்தப்படுத்தக் கூடாது" என்ற ஆற்றல் வாய்ந்த வரிகளை எழுதினார். இவ்வரிகளை வாசித்துப் பாராட்டிய வலம்புரி ஜான், அடுத்த வாரமே 'தாய்' வார இதழின் தலையங்கத்தில் இதனைப் புகழ்ந்து எழுதியதுடன் அவருக்குப் பணியும் வழங்கினார். பழநிபாரதியின் கவிதைகளில் மனிதநேயமே முதன்மைப் பொருளாக விளங்குகிறது. மனிதர்கள் தங்களுக்குள் ஏற்படுத்திக் கொண்டுள்ள மதம் சார்ந்த சுவர்கள், அவர்களின் இயல்பான மகிழ்ச்சியையும், குழந்தைகளின் சிரிப்பையும் எவ்வாறு பறிக்கின்றன என்பதை அவர் மிக ஆழமாகப் படம் பிடித்துள்ளார்.

**3.3 போலிச் சுதந்திரத்தின் அவலங்கள்**

இந்தியாவிற்குச் சுதந்திரம் கிடைத்துவிட்டது. ஆனால், அனைவரும் எதிர்பார்த்த சுதந்திரம் இன்னமும் கிடைக்கவில்லை. அடிமை, அறியாமை, வறுமை என்பதோடு தான் மக்கள் இன்னமும் வாழ்கிறார்கள். சுதந்திரத்தின் பயனை ஒரு சிலரே அனுபவிக்கிறார்கள் எனவும், மற்றவர்கள் இன்னமும் அடிமையாகவும் சுதந்திரக் காற்றை சுவாசிக்காதவர்களாகவும் இருக்கிறார்கள் என்ற கருத்தினைக் கவிஞர் வைரமுத்து எதிரொலித்திருப்பதை,

“எம் சுதந்திரச் சீதை மீட்பின் பின்னும் சிறையிருக்கி;றாள்… அசோகவனத்திலல்ல… ஆரோ சிலரின் அந்தப் புரத்தில் ”[4]

என்ற கவிதையில் சீதையை விடுதலைப் பொருளாக்கி, சுதந்திர மீட்புக்குப் பின்னரும் சிலரின் சிறையில் சிலருக்கே சொந்தமாக இருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

நம் தேசம் சுதந்திரம் அடைய பல்லாயிரக் கணக்கானவர்கள் தங்கள் இன்னுயிரை நாட்டுக்காக ஈந்து சுதந்திரம் பெற்றுத் தந்தனர். ஆனால், இன்று நாட்டில் முதலாளி, தொழிலாளி வர்க்க பேதம் தலைதூக்கி வெறியாட்டம் ஆடுவதை உணர்ந்து கவிஞர் பழநிபாரதி குறிப்பிடுகையில்,

“ஆகஸ்ட் பதினைந்து சுதந்திரத்தின் பிறந்தநாளா? இல்லை நினைவுநாளா? இன்னும்கூட ஒரு சிலரையே அழைத்து பிறந்தநாள் ‘கேக்’ வெட்டுகிறது”[5]

என்ற கவிதையில் சுதந்திர தினம் விடுமுறை தினமாக மட்டும் தான் நம் நாட்டு மக்களால் அனுசரிக்கப்படுகிறது என்கிறார். சுதந்திர தினத்திற்கு விடுமுறை இல்லையென்றால் பலபேருக்கு

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12012026*

அன்றைய தினமே மறந்து போயிருக்கும் என்பதை உணர்த்துகிறார். விடுமுறை என்றால் அதில் பல அர்த்தங்கள் ஒளிந்து இருக்கின்றன. நம் நாட்டைப் பொறுத்தவரை பொது விடுமுறை என்று எடுத்துக்கொண்டால் ஒன்று தலைவர்களின் பிறந்த நாளாக இருக்கும்; அல்லது நினைவு நாளாக இருக்கும். இது நம் நாட்டின் தலைவர்களுக்கு மட்டுமல்ல, நமக்குக் கிடைத்த சுதந்திரத்திற்கும் இதே நிலைதான் எனக் கூறியுள்ளது மிகச் சிறப்பானதாகும்.

## 4. வறுமையின் கோலமும் வர்க்கப் போராட்டத்தின் பதிவுகளும்

### 4.1 பாட்டாளி வர்க்கத்தின் பசித் துயரம்

பாரதி கண்ட புதிய உலகத்தில் 'தனியொருவனுக்கு உணவில்லை எனில் இந்த ஜகத்தினை அழித்திடுவோம்' என்றார். ஆனால், எண்ணிலடங்காத மக்கள் பசியால் வாடப்போகும் நிலையினை எண்ணாமற் போனதுதான் பாரதி கண்ட கனவின் உண்மைக்குப் புறம்பானதாகிறது. இதைப் பாரதியிடமே முறையிடுகிறார் கவிஞர் பழநிபாரதி,

" 'கனியும் கிழங்கும் தானியங்களும் கணக்கின்றித் தருநாடு' என்று நீ பாடிய பாரதத்தில் பசியின் கனவுகளே பசுமையாய்த் தெரிகின்றன... "[6]

என்ற கவிதையில் வெயிலையும், மழையையும் பொருட்படுத்தாமல் இரத்தத்தை வியர்வையாகச் சிந்தி உழைத்திடும் பாட்டாளி வர்க்கத்தின் பசி தீர்க்கும் உணவுகூட இன்று கனவாய்த் தெரிகின்றது எனக் கூறியுள்ளார். உழைப்பாளி எவ்வளவுதான் உழைத்து ஓடாய்த் தேய்ந்தாலும், வறுமையில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரம் மட்டும் இன்னமும் மேம்படாத நிலையையும், அவர்கள் அணிந்திருக்கும் ஆடையின் கோலத்தினையும், குடியிருக்கும் குடிசையின் அவல நிலையினைப் பற்றிக் கவிஞர் பழநிபாரதி குறிப்பிட்டுள்ளார் என்பதை,

"உன் ஓலைக் குடிசையின் கண்ணீர்த் திருவிழாவுக்கு குடும்பக் கண்மணிகளின் கிழிந்த ஆடைகளே தோரணங்களாகின்றன. "[7]

என்ற கவிதையின் மூலம் படிப்பவர்களின் இதயத்தைக் கனக்கச் செய்துவிடுகிறார்.

மண்ணைப் பிளந்து கழனியாக்கி விதைப்பவன் ஒருவன், அந்தப் பலன்கள் முழுவதையும் அனுபவிப்பவன் வேறொருவன். இந்த நிலைதான் இன்றுவரை தொடர்கிறது எனத் தன் ஆதங்கத்தைக் கவிஞர் மு.மேத்தா பதிவு செய்திருக்கின்றார் என்பதை,

"தேசத்தில் மாற்றமில்லையென்று யார் சொன்னது? ஆபுத்திரனே! அமுத சுரபியைத்தான் நீ தந்து சென்றாய் இப்போது எங்கள் கையிலிருப்பது பிச்சைப் பாத்திரம்! "[8]

என்ற கவிதை வரிகளின் மூலம் பசியின் கொடுமையால் நம் தேசத்து மக்கள் பிச்சை எடுக்க

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 12, Issue 01 (June-2026)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm12012026*

வேண்டிய அவலநிலையில் உள்ளார்கள் என்பதைக் குறிப்பிடுகிறார்.

### 4.2 வறுமை ஒழிப்பில் பாரதத்தின் பின்னடைவுகள்

மு.மேத்தாவின் கவிதைகளில் சோகமே எப்போதும் அடிநாதமாக ஒலிக்கிறது. இவரது 'திருவிழாவில் ஒரு தெருப்பாடகன்' என்ற கவிதைத் தொகுப்பில் ஏழைகளின் அடுப்பு எரியாத அவலநிலை மிகக் கொடூரமாகப் பதிவாகியுள்ளது :

"முற்றத்தில் கிடந்து முனகும் ஏழையின் முகம் பார்க்காமல் மூன்று கண்களையும் மூடிக் கொண்டிருந்த அடுப்புக்குள் இதுவரை இருந்தது இருண்ட காலமே!"

இதன் மூலம் அறிவியல் மற்றும் பொருளாதாரத் துறைகளில் நாம் எவ்வளவு முன்னேற்றமடைந்திருந்தாலும், விளிம்புநிலை மக்களின் வீடுகளில் பசிப்பிணி இன்னும் நீங்கவில்லை என்பதை மேத்தா படம் பிடித்துக் காட்டுகிறார். அலங்காரத் தோரணங்களும், வீதி விளக்குகளும் நாடெங்கும் ஒளிர்கையில், ஏழை மக்களின் வயிற்றுப் பசியை அணைக்கும் அடுப்புகள் மட்டும் எரியாமல் அணைந்து கிடக்கின்றன. இதனை,

"அலங்கார விளக்குகள் வீதிகளில் போட்டாச்சு அடுப்பு விளக்கோ அணைந்து வெகுநாளாச்சு"

என்ற வரிகள் உறுதி செய்கின்றன. "அண்டார்டிகாவின் அடிக்கோட்டைக் கடந்த பாரதம், இன்னும் வறுமைக் கோட்டை மட்டும் கடக்காமல் இருக்கிறது" என்ற வரிகள் நாட்டின் உண்மையான பொருளாதாரப் பின்னடைவை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன.

## 5. இன்றைய அரசியல் சீர்கேடுகளும் மக்களின் மனப்பான்மையும்

### 5.1 சாதிய அரசியல் மற்றும் தேர்தல் அவலங்கள்

இக்காலத்தில் அரசியல் எல்லாம் பணமாக மாறிவிட்டது. மக்களிடம் வாக்குகளைப் பெற்றுப் பதவியில் அமர்வதற்காகப் பல்வேறான வாக்குறுதிகளை அரங்கேற்றம் செய்வார்கள். பதவிக்கு வந்தவுடன் அனைத்தையும் மறந்து தன் வாழ்வை மட்டுமே உயர்த்திக்கொள்வார்கள். இப்படிப்பட்ட இன்றைய அரசியல் நிலையினை எண்ணி ஆதங்கத்தோடு கவிஞர் அறிவுமதி,

"அரசியலின் ஆனா ஆவன்னாவைக் கூடப் புரிந்து கொள்ளாத அனுதாபத்திற்கு உரியவர்கள்! "[9]

என்று மக்களைப் பார்த்து கேள்வி எழுப்பியுள்ளார். ஒரு வேட்பாளரைத் தேர்ந்தெடுக்கும்போது, அந்த வேட்பாளர் நல்லவரா? கல்வித் தகுதி பெற்றவரா? என்பதை எல்லாம் மக்கள் சிந்திப்பதே இல்லை. மாறாக, நாம் விரும்பும் கட்சியைச் சேர்ந்தவரா? நமது சாதிக்காரரா? என்று நினைத்துத்தான் வாக்களிக்கிறார்கள். மக்களின் இந்த மனப்பான்மை மாறாதவரை இந்திய மக்களின் வாழ்க்கைத் தரத்தில் வளர்ச்சி ஒன்றும் நிகழ்ந்துவிடாது என உணர்த்தியுள்ளார்.

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12012026*

### 5.2 அரசியல் ஊழலும் விளிம்புநிலை மக்களின் ஏமாற்றமும்

சுதந்திர நாட்டில் எது வளர்ச்சி அடைந்திருக்கிறதோ இல்லையோ அரசியல் கட்சிகளின் எண்ணிக்கையில் மட்டும் குறைவில்லை. சாதிக்கொரு தலைவன், வீதிக்கொரு கட்சி என மாறிப்போன இன்றைய அரசியலைக் கவிஞர் பழநிபாரதி குறிப்பிடுகையில்,

"விழிப்பாக இரு... உன் கோவணம் கூட கொடிகளுக்காக அறுக்கப்படலாம்... "[10]

என்று கூறுவதில் தேசத்தின் இன்றைய நிலையினையும், மலிந்துவிட்ட அரசியல் கட்சியினையும் குறிப்பிடுகிறார். இக்கருத்தினை ஏற்கும் விதமாக கவிஞர் மு.மேத்தா குறிப்பிடும்போது,

"தேசம் போகிற போக்கைப் பார்த்தால் பிறந்தநாள் உடையே எங்கள் தேசிய உடையாகிவிடும் போல் தெரிகிறது"[11]

என்று இன்றைய அரசியல்வாதிகளின் நிலையினைக் கருத்தில் கொண்டு தேசிய உடையைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் தேவையையும், மக்களின் தேவையையும் உணர்ந்து செயல்படும் அரசியல்வாதிகளைவிட, தன் வீட்டின் தேவையைக் குறித்து மட்டுமே சிந்திக்கும் அரசியல்வாதிகள் இன்று மலிந்துவிட்டார்கள் என்ற கருத்தினைக் கவிஞர் கி.கொளஞ்சி உணர்த்தியிருப்பதை,

"அமைச்சரவையில் மாற்றி மாற்றி ஊழலைப் பற்றிப் பேசிக்கொண்டே இருந்தால் எப்பொழுது எங்களுக்கு என்ன செய்யப் போகிறீர்கள்"[12]

என்ற கவிதையில் ஏழையின் பரிதாப நிலையினைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

இத்தகைய போலி அரசியல்வாதிகளையும், சமுதாயத்தைச் சுரண்டுபவர்களையும் கடுமையாக எச்சரிக்கும் வகையில் கவிப்பேரரசு வைரமுத்து தனது 'திருத்தி எழுதிய தீர்ப்புகள்' என்ற நூலில் பின்வருமாறு சாடுகிறார் :

"நடத்துங்கள்..! உங்கள் மேடை, உங்கள் நாக்கு, எது வேண்டுமானாலும் பேசுங்கள்! உங்கள் பேனா, உங்கள் அச்சகம், எது வேண்டுமானாலும் எழுதுங்கள்! உங்கள் தராசு, உங்கள் எடைக்கல், எதுவேண்டுமானாலும் விமர்சியுங்கள்! உங்கள் சுவர்கள், உங்கள் காகிதம், எது வேண்டுமானாலும் ஒட்டுங்கள்! உங்கள் வாத்தியம், உங்கள் கச்சேரி, எது வேண்டுமானாலும் வாசியுங்கள்! உங்கள் தூரிகை, உங்கள் வர்ணம், எது வேண்டுமானாலும் வரையுங்கள்! ஆனால், நாளை காலத்தின் விமர்சனம், உங்கள் பிணங்களைக் கூடத் தோண்டி எடுத்துவந்து தூக்கில் போடும்! என்பது மட்டும் ஞாபகம் இருக்கட்டும்."

*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*Volume 12, Issue 01 (June-2026)*
www.tamilmanam.in
*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12012026*

### 6. பாரம்பரியத் தொழில்களும் தொழிலாளர்களின் வாழ்வாதாரச் சிதைவுகளும்

### 6.1 நெசவுத் தொழிலாளர்களின் இருண்ட வாழ்வு

இந்தியாவின் பாரம்பரிய உற்பத்தித் தொழிலில் நெசவுத் தொழில் முதலிடம் பெறுகிறது. முதன் முதலில் பருத்தியாடை நெய்தவன், இன்று பட்டாடை நெய்துவிட்டுக் கந்தலாடைக் கட்டி வாழ்கின்றான் என நெசவாளியின் தோற்றத்தினைப் பற்றி கவிஞர் பழநிபாரதி குறிப்பிடுகையில்,

"புரட்டிப் பார்த்த புத்தாடைப் பளபளப்பில் நூல் போல் இளைத்த நெசவாளர் தெரிந்ததுண்டா? "[13]

என்ற கவிதையில் வறுமையினால் இவர்களின் உடல் நூல்போல் இளைத்துக் காணப்படுகிறது என்றும், இவர்கள் உருவாக்கிய புத்தாடை மட்டும் தான் பளபளக்கிறது, ஆனால் இவர்களின் வாழ்க்கை மட்டும் இன்னும் இருட்டில்தான் இருக்கிறது என்ற கருத்தை இக்கவிதை வரிகளில் பதிவு செய்திருக்கிறார்.

### 6.2 உழைப்பாளர் வர்க்கத்தின் உரிமைக்குரல்

உழைப்பாளிகளின் வாழ்வில் வறுமையே நிலையானதாகிப் பசியின் கொடுமையால் வாடிவதங்குவர். இவ்வாறு பசியினையே உணவாக உட்கொண்டதால் அவர்களுக்கு அதுவே தோழமையாகிவிட்டது. இதனால் அவர்களின் எலும்புகள் வெறும் கூடாகப் படம் பிடித்துக் காட்டியது போல நம்மால் எண்ணிவிடக்கூடிய நிலை காணப்படுகிறது என்பதைக் கவிஞர் அறிவுமதி குறிப்பிடுகையில்,

"எங்களால் எந்த இரகசியமும் மூடி மறைக்கப்படுவதில்லை அதனால் தான் எங்கள் எலும்புகளைக் கூட உங்களால் தெளிவாக எண்ணிவிட முடிகிறது"[14]

என்று வறுமையின் பிடியில் உள்ள உழைப்பாளி வர்க்கத்தின் வாழ்வாதாரமற்ற வாழ்க்கை நிலையினைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

தொழிலாளர்கள் வாழ்வு ஏற்றம்பெற வேண்டுமானால் முதலாளியின் ஒத்துழைப்பும் தேவையாகிறது. அதுபோல் இவர்களின் துயரம் துடைக்கப்படக் கவிஞனின் கவிதையும் துணை நிற்கிறது என கவிஞர் மு. வள்ளியம்மை குறிப்பிட்டுள்ளதை,

"கவிஞனே! உன் கவிதைப் பயணத்தில் தொழிலாளர்களின் துயர நெருப்பு அணைக்கப்படும் கதிரவனாய் உன் கரங்கள் தட்டி எழுப்பட்டும் விடியலை நோக்கி!"[15]

எனக் கவிஞர்களின் வலிமையான எழுத்தின் மீது கொண்ட நம்பிக்கையால் இக்கவிஞர் ஏனையக் கவிஞர்களை நோக்கி இவ்வாறு குறிப்பிடுகிறார்.

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12012026*

## 7. பழநிபாரதியின் கவிதை மரபும் அதன் இலக்கியச் சிறப்பும்

### 7.1 அழகியலும் சீற்றமும் கலந்த புதுக்கவிதை வடிவம்

பழநிபாரதியின் கவிதை உலகம் வெறும் காதல் சார்ந்தது மட்டுமல்ல. காதல் ஒரு விசித்திரமான களவு என்று பழங்காலத்தவர் குறிப்பிட்டதை நவீன வடிவில் 'காதலின் பின்கதவு' என்ற நூலில் அவர் வெளிப்படுத்தியுள்ளார். இருப்பினும், சமூக அவலங்கள், உலகளாவிய நிகழ்வுகள், போர்ச் சூழல்கள் மற்றும் பசுமைச் சூழலின் அழிவுகள் ஆகிய அனைத்தும் அவரது கவிதைகளின் பாடுபொருள்களாயின. இதனாலேயே, "பழநிபாரதியிடம் கவிதை - காதலின் முத்தங்களாக நாணிச் சிவக்கவில்லை, மாறாக கனலின் உயிர்த்துடிப்புகளாகச் சீறிச் சிவந்துள்ளது" என்று ஈரோடு தமிழன்பன் மதிப்பிட்டார். மேலும், இவரது கவிதைகளில் கையாளப்பட்டுள்ள உவமைகள் சங்க இலக்கியத்தில் காணப்படும் உவமைகளைப் போல பிரமிப்பூட்டுகின்றன என்று கவிஞர் முத்துலிங்கம் பாராட்டியுள்ளார்.

திரையுலகில் விக்ரமனின் 'புதிய மன்னர்கள்', 'கோகுலம்', பொன்வண்ணனின் 'அன்னை வயல்' போன்ற பல திரைப்படங்களுக்குப் பாடல்களை இயற்றியபோதும், அவரது கவிதை மனம் எப்போதும் எளிய மக்களின் அவலங்களையே பாடியது. ஹார்வர்டு பல்கலைக்கழகத்தின் தமிழ் இருக்கைக் கீதம் ஒன்றினை எவ்வித ஊதியமும் பெறாமல் அவர் இயற்றித் தந்தது அவரது தமிழ்ப் பணியின் மாண்பை உணர்த்துகிறது.

### 7.2 சென்ரியு வடிவமும் சமூக நகைச்சுவைப் பதிவுகளும்

பழநிபாரதியின் கவிதைகளில் சென்ரியு வடிவம் முக்கியப் பங்கு வகிக்கிறது. எதைச் சொன்னாலும் அதில் கொஞ்சம் நகைச்சுவை கலந்து சொல்லும் பாணி இவருடைய சென்ரியு கவிதைகளில் நிலைத்துவிட்டது. போலி மருத்துவம், போலி பாசம், கல்விச் சீர்கேடு போன்ற பல்வேறு சமுதாயப் பிரச்சினைகள் இத்தகைய கவிதைகளின் மூலம் தோலுரித்துக் காட்டப்படுகின்றன. வாழ்கின்ற காலத்தில் இப்படித்தான் வாழ வேண்டும் என்ற கொள்கையுடைய சான்றோர்களுக்கும், எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்ற எண்ணமுடைய சுயநலவாதிகளுக்கும் இடையே உள்ள முரண்பாடுகளை இக்கவிதைகள் நகைச்சுவையுடன் சுட்டிக்காட்டுகின்றன.

## 8. சமுதாயப் பதிவுகளின் ஒப்பீட்டுத் தரவுகள் (அட்டவணை)

சமகாலப் புதுக்கவிதை உலகில் பல்வேறு சமூக அவலங்களை வெளிக்கொண்டுவந்த முதன்மைக் கவிஞர்களின் பங்களிப்புகள் பின்வரும் அட்டவணையில் ஒப்பிடப்பட்டுள்ளன:

,| Copyright © Author(s)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12012026*

| வரிசை எண் | கவிஞர் | முதன்மை நூல் / கவிதைத் தொகுப்பு | முக்கியச் சமுதாயப் பதிவுகள் மற்றும் பாடுபொருள்கள் |
|---|---|---|---|
| 1 | பழநிபாரதி | நெருப்புப் பார்வைகள், காதலின் பின்கதவு, வெளிநடப்பு | போலிச் சுதந்திரம், நெசவாளர்களின் வறுமை, போலி மதக் கோட்பாடுகள், சென்ரியு நகைச்சுவை. |
| 2 | வைரமுத்து | திருத்தி எழுதிய தீர்ப்புகள் | சுதந்திரச் சீதையின் சிறையிருப்பு, சுரண்டலுக்கு எதிரான காலத்தின் விமர்சனம், இயற்கையோடு இயைந்த வாழ்க்கை. |
| 3 | மு. மேத்தா | கண்ணீர்ப் பூக்கள், திருவிழாவில் ஒரு தெருப்பாடகன் | பசி மற்றும் வறுமையின் கொடுமை, தேசப்பிதாவுக்கு அஞ்சலி, அடுப்பு எரியாத வீடுகளின் இருண்ட காலம். |
| 4 | அறிவுமதி | நிரந்தர மனிதர்கள், அவிழரும்பு | உழைப்பாளர் எலும்புகள் எண்ணப்படும் அவலம், அரசியல் அறியாமை, சாதி ஒழிப்பு, சமூக நீதி. |
| 5 | கி. கொளஞ்சி | காக்கைச் சிறகினிலே | அமைச்சரவையின் மாற்றி மாற்றிப் பேசும் ஊழல் போக்கு, ஏழைகளின் ஏமாற்ற நிலை. |
| 6 | மு. வள்ளியம்மை | கானல் மலர்கள் | தொழிலாளர்களின் துயர நெருப்பை அணைப்பதற்கான கவிஞனின் தூண்டுதல். |

## 9. முடிவுரை

தமிழ்ப் புதுக்கவிதைகளில் சமுதாயப் பதிவுகள் என்பது வெறும் வார்த்தை விளையாட்டு அல்ல, அது மக்களின் வாழ்க்கையை மாற்றியமைக்கும் ஒரு சமூகக் கருவியாகும். கவிஞர் பழநிபாரதியின்

CC BY ,| Copyright © Author(s)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12012026*

கவிதைகள் சமுதாயத்தின் படைப்பாகவும், அதன் உண்மைகளைப் பிரதிபலிக்கும் காலக் கண்ணாடியாகவும் திகழ்கின்றன. மனிதர்கள் சாதி, மதங்களின் மீது கொண்டுள்ள பற்றினால் சமூகத்தில் பல்வேறு இன்னல்கள் தோன்றுவதையும், அதிலிருந்து மக்கள் விடுபட வேண்டியதன் அவசியத்தையும் அவரது கவிதைகள் வலியுறுத்துகின்றன.

மக்கள் அரசியலைத் தூய்மையான மனதுடன் அணுக வேண்டும் என்றும், அரசியல்வாதிகள் அதன் மீது ஏற்படுத்தும் களங்கங்களைக் கண்டு விழிப்போடு இருக்க வேண்டும் என்றும் அவர் எச்சரிக்கிறார். மேலும், முதலாளிகளின் சுரண்டல்களையும் நெசவாளர்கள் உள்ளிட்ட தொழிலாளர்களின் அடிமை நிலையையும் படம் பிடித்துக் காட்டும் பழநிபாரதி, தொழிலாளர்கள் ஒற்றுமையுடனும் சமூக அக்கறையுடனும் செயல்பட வேண்டியதன் இன்றியமையாமையைத் தனது கவிதைகள் மூலம் உணர்த்தியுள்ளார்.

## 10. அடிக்குறிப்புகள் (Footnotes)

1. நா. கதிரைவேல்பிள்ளை, *தமிழ் மொழி அகராதி*, பக். 76.
2. *வாழ்வியற் களஞ்சியம்*, தொகுதி நான்கு, பக். 477.
3. பழநிபாரதி, *காதலின் பின்கதவு*, பக். 33.
4. வைரமுத்து, *திருத்தி எழுதிய தீர்ப்புகள்*, பக். 27.
5. பழநிபாரதி, *நெருப்புப் பார்வைகள்*, பக். 20.
6. மேலது, பக். 30.
7. மேலது, பக். 49.
8. மு.மேத்தா, *கண்ணீர்ப் பூக்கள்*, பக். 35.
9. அறிவுமதி, *நிரந்தர மனிதர்கள்*, பக். 71.
10. பழநிபாரதி, *நெருப்புப் பார்வைகள்*, பக். 50.
11. மு.மேத்தா, *கண்ணீர்ப் பூக்கள்*, பக். 33.
12. கி. கொளஞ்சி, *காக்கைச் சிறகினிலே*, பக். 50.
13. பழநிபாரதி, *காதலின் பின்கதவு*, பக். 47.
14. அறிவுமதி, *அவிழரும்பு*, பக். 14.
15. மு. வள்ளியம்மை, *கானல் மலர்கள்*, பக். 65.

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12012026*

### 11. துணைநூற் பட்டியல் (References in MLA Style)

[1]. அறிவுமதி. *அவிழரும்பு*. பூம்புகார் பதிப்பகம், 2000.

[2]. அறிவுமதி. *நிரந்தர மனிதர்கள்*. மணிவாசகர் பதிப்பகம், 1995.

[3]. கதிரைவேல்பிள்ளை, நா. *தமிழ் மொழி அகராதி*. சாரதா பதிப்பகம், 1995.

[4]. கி. கொளஞ்சி. *காக்கைச் சிறகினிலே*. காவ்யா, 2005.

[5]. பழநிபாரதி. *காதலின் பின்கதவு*. கொன்றை வெளியீடு, 2002.

[6]. பழநிபாரதி. *நெருப்புப் பார்வைகள்*. பூங்கொடி பதிப்பகம், 1999.

[7]. மு. மேத்தா. *கண்ணீர்ப் பூக்கள்*. நர்மதா பதிப்பகம், 1974.

[8]. மு. மேத்தா. *திருவிழாவில் ஒரு தெருப்பாடகன்*. குமரன் பதிப்பகம், 2009.

[9]. மு. வள்ளியம்மை. *கானல் மலர்கள்*. இளங்கோ பதிப்பகம், 1998.

[10]. *வாழ்வியற் களஞ்சியம்*. தொகுதி நான்கு, தமிழ்ப் பல்கலைக்கழகம், 1986.

[11]. வைரமுத்து. *திருத்தி எழுதிய தீர்ப்புகள்*. திருமகள் நிலையம், 1990.

### 12. நெறிமுறைசார் அறிவிப்பு மற்றும் முரண்பாட்டு அறிக்கை (Author Declaration Statement)

இக்கட்டுரையின் ஆசிரியர், இந்த ஆய்வுப்பணி மற்றும் கட்டுரையாக்கம் தொடர்பாகத் தனக்கு எவ்விதமான நிதிசார் அல்லது தனிப்பட்ட நலன் சார்ந்த முரண்பாடுகளும் (Conflict of Interest) இல்லை என இதன் மூலம் முழுமையாக அறிவிக்கிறார். இக்கட்டுரையில் பயன்படுத்தப்பட்டுள்ள அனைத்து மேற்கோள்களும் முறையான இலக்கிய ஆய்வின் அடிப்படையில் மட்டுமே கையாளப்பட்டுள்ளன.

*I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work

Tamilmanam